புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

எண்.04/TD/DTC/PA/2015 புதுச்சேரி, தேதி: 29.02.2016

## செய்திக் குறிப்பு

### காட்டுக்குப்பத்தில் புதிய போக்குவரத்து கிளை அலுவலகம் திறப்பு மற்றும் போக்குவரத்துத் துறையின் பொதுமக்களுக்கான இணையதளம் சேவை தொடக்கம்

பொதுமக்களுக்கு போக்குவரத்துத் துறையின் சேவைகள் அருகாமையில் கிடைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 2014-15 வரவு செலவு திட்ட அறிக்கையில் புதுச்சேரியில் ஒவ்வொரு தாலுகாவிலும் போக்குவரத்துத் துறையின் கிளை அலுவலகங்கள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பினை நடைமுறை படுத்துவதற்காக அதிகாரப் பகிர்வு மற்றும் புதிய அலுவலகங்கள் தொடங்குவதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 08.07.2015 அன்று திருபுவனையிலும் 27.08.2015 அன்று சாரத்தில் கிளை அலுவலகங்கள் மாண்புமிகு புதுச்சேரி முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டது.

காட்டுக்குப்பத்தில் பாகூர் தாலுகாவிற்கான வட்டாரப் போக்குவரத்து கிளை அலுவலகம் மாண்புமிகு புதுச்சேரி முதலமைச்சர் அவர்களால் 29.02.2016 அன்று தொடங்கிவைக்கப்பட்டுள்ளது. புதிதாக தொடங்கப்பட்டுள்ள வட்டார போக்குவரத்து கிளை அலுவலகத்தில் பாகூர் தாலுகாவைச் சேர்ந்த பொது மக்களுக்கு பழகுனர் உரிமம், ஓட்டுனர் உரிமம் வழங்குவது, புதிய வாகனப் பதிவு, வாகனங்களுக்கு தகுதி சான்றிதழ் வழங்குதல், வெளியூர் செல்லும் வாகனங்களுக்கு சிறப்பு பெர்மிட் வழங்குதல் உட்பட படிப்படியாக அனைத்து சேவைகளும் புதிய அலுவலகத்தில் செயல்பாட்டுக்கு வரும். பாகூர் தாலுகாவைச் சேர்ந்த பொது மக்கள் மேற்படி அலுவலகத்தை அணுகி அதன் சேவைகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

போக்குவரத்துத் துறையின் சேவைகள் இணையதளம் மூலம் பொது மக்களுக்கு வழங்கும் வகையில் போக்குவரத்து துறையின் இணையதள சேவைகளும் இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டது. உழவர்கரை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பழகுனர் உரிமம் மற்றும் ஓட்டுனர் உரிமம் ஆகியவற்றிற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பம் செய்யும் முறையினை இன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் காட்டுக்குப்பத்திலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. படிப்படியாக போக்குவரத்துத் துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் இச்சேவை விரிவுப்படுத்தப்பட உள்ளது என்பது பொதுமக்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர், தலைமைச் செயலர் திரு. மனோஜ் பரிதா, இ.ஆ.ப., போக்குவரத்துச் செயலர் திரு.ராகேஷ் சந்திரா, இ.ஆ.ப., போக்குவரத்து ஆணையர் திரு.எஸ்.டி.சுந்தரேசன், துணை போக்குவரத்து ஆணையர் திரு.சுப்ரமணிஸ்வராவ், புதுச்சேரி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.ரகுநாத், புதிய கிளை அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கலியபெருமாள் மற்றும் போக்குவரத்துத் துறை அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

GOVT. OF PONDICHERRY

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்